# கலைஞரும் நானும்

107

“முத்தமிழறிஞர் கலைஞருடன் நேரடியாக அதிக நெருக்கம் கொண்டிருக்கவில்லை என்றாலும், ‘அவரது தமிழாசிரியர் மகன்’ என்பதில் அவருக்கும் எனக்கும் அரிய நினைவுகள் நெகிழ்வூட்டுபவை” என்கிறார் பேராசிரியர் மறைமலை இலக்குவனார்.





# “அவர் புகழைப் பேசுவதே அன்பு!”

**மறைமலை இலக்குவனார், உலக திருக்குறள் இணையக் கல்விக் கழகம்**

முத்தமிழறிஞர் கலைஞருக்குத் தமிழ் ஆசானாக, அவர் உயர்நிலைப் பள்ளி பயின்றபோது தமிழாசிரியராக இருந்தவர், தமிழ்ப் போராளியாக அறியப்பட்ட என் தந்தை இலக்குவனார் அவர்கள். “நான் உயர்நிலைப் பள்ளி படிக்கையில், எனக்குத் தமிழுணர்வுடன் சுயமரியாதை உணர்வையும் பண்பையும் ஊட்டியவர் இலக்குவனார்” என, என் தந்தையார் குறித்து ‘நெஞ்சுக்கு நீதி’யில் குறிப்பிட்டிருக்கிறார். அந்த நினைவுகளை மறக்காதவர் கலைஞர் என்பதை, நான் பெருமைப்படும் வகையில், என்னை உணர வைத்தவர் கலைஞர்.

கலைஞர் தனது இளவயதில் என் அப்பாவிடம் தமிழுடன் சுயமரியாதை அரசியலைக் கற்றிருக்கலாம். ஆனால், சுயமரியாதை அரசியலில் அவர் மிகமுக்கிய ஆளுமையாக வளர்ந்ததில் அப்பாவுக்கு மிகவும் விருப்பம் . ‘கலைஞர் என் மாணவர்’ என்பதில் அவருக்குப் பெருமிதம் இருக்கும்.

### கல்லூரி உரைகள், கைதுகள் !

1962 -ஆம் ஆண்டு வாக்கில் அவர் மதுரை தியாகராயர் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராக இருந்தபோது, கலைஞரை கல்லூரிக்கு அழைத்து வந்து பேச வைத்திருக்கிறார். அப்போது நான் புகுமுக வகுப்பு மாணவனாக கலைஞரின் உரையைக் கேட்டு கிறங்கியிருக்கிறேன். கலைஞரின் உரை என்பது, இளைஞர்களை அரசியலுக்கு இழுக்கும் அலைபோல அன்றைக்கு இருந்தது. அதைத் தொடர்ந்து கலைஞரின் பல கூட்டங்களைக் கேட்டிருக்கிறேன்.

1965- ஆம் ஆண்டு, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது, கலைஞர் கைது செய்யப்பட்டு, ஏப்ரல் மாதத்தில் பாளையங்கோட்டை சிறையில் இருந்து விடுதலையானார். அவரது வரவேற்பு நிகழ்வில், அப்பா கலந்துகொண்டு உரையாற்றினார். அதன்பின்னர், மே மாதத்தில் **‘தமிழ் உரிமைப் பெருநடைப் பயணம்’** என அப்பா அறிவித்திருந்தார். அதையடுத்து அப்பா தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு, வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். அந்தக் கைதைக் கண்டித்து ‘முரசொலி’யில் தலையங்கம் எழுதினார் கலைஞர். எங்களுக்கெல்லாம் கலைஞரின் அந்தக் குரல் ஆறுதலாக இருந்தது. அப்பா சிறையில் இருந்து விடுதலை ஆனதும் பார்ப்பதற்காக கலைஞர் வந்திருந்தார். அப்போது, எங்களிடம் நலம் விசாரித்த அவரிடம், என் தம்பி வள்ளுவன் ஒரு நூலில் கையெழுத்துப் பெற்றதை மறக்க முடியாது.

### கனிவான கலைஞர்

1966-ஆம் ஆண்டுவாக்கில் மதுரை தமுக்கம் மைதானத்தில் அவரது தேர்தல் பிரச்சார உரை, அன்றைக்கு எங்களையெல்லாம் கட்டிப்போட்ட உரை எனலாம். “தி.மு.க.வுக்கு வடக்கே இருந்து பணம் வருகிறது” என அப்போது காமராஜர் ஒரு விமர்சனம் செய்திருந்தார். அதற்கு அந்த மேடையில் பதில் அளித்த கலைஞர், “ஆமாம் எங்களுக்கு வடக்கே நாசிக் நகரில் அச்சடித்த பணம்தான் வருகிறது. ஆனால், காமராஜருக்கு கோவையில் அச்சடித்துத் தருகிறார்” என அன்றைக்கு காங்கிரசுக்கு தேர்தல் நிதி கொடுத்த பிரமுகரின் பெயருடன் பொருத்திச் சொன்னதும் மொத்தக் கூட்டமும் ஆர்ப்பரித்த அந்த நிகழ்வை, எத்தனை ஆண்டுகள் ஆனாலும் மறக்க முடியாது. நிதானமும் சாதுர்யமும் கொண்ட ஆளுமையாக, அந்த மேடையில் கலைஞர் ஒளிர்ந்தார்.

அதன்பின்னர், கழகம் ஆட்சிக்கு வந்ததும், அப்பாவை சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராக பேரறிஞர் அண்ணா நியமித்தார். பின்னர், நானும் கல்லூரிப் பேராசிரியராகத் தகுதி அடிப்படையில் தற்காலிகமாகப் பணிக்குச் சேர்ந்தேன். 1970-ஆம் ஆண்டில் தமிழ் பயிற்சிமொழி தொடர்பாக, ‘ஒரு லட்சம் கையெழுத்து இயக்கம்’ நடத்தி, கலைஞரிடம் அவற்றைக் கொண்டு சேர்த்தேன். தமிழைப் பயிற்சிமொழி ஆக்குவதில் அவர் கொண்டிருந்த உறுதியைப் பற்றி, அன்று பேசிக் கொண்டிருந்தோம்.

கலைஞருக்கு **‘மணிவிழா மலர்’** வெளியிட்டபோது அதில் எனது கட்டுரையும் இடம்பெற்றது. அரசுப் பணியில் இருந்த சில அறிஞர்கள் அன்றைக்கு கலைஞர் குறித்து எழுதத் தயங்கியபோது, எந்தத் தயக்கமும் இல்லாமல் நான் ‘கலைஞரின் நாடகவியல்’ குறித்து கட்டுரை எழுதியிருந்தேன்.

> **“அப்பா எதையெல்லாம் முன்னெடுத்தாரோ, அதை உலகமே வியக்கும் வகையில், செய்து முடித்தவர் கலைஞர்.”**

கலைஞரின் ‘நெஞ்சுக்கு நீதி’ முதற்பாகத்துக்கு மெய்ப்புத் திருத்தம் செய்து கொடுத்திருந்தேன். “ஒரு பிழைகூட இல்லையே” என கலைஞர் அதைப் பாராட்டி இருந்தார். அவரது ‘சொற்பொழிவுகள்’ நூல் உருவாக்கப்பட்டபோது, அதற்கு பொழிப்புரை எழுதி இருந்தேன். நான் அவ்வப்போது முரசொலியில் எழுதுவேன், அந்தக் கட்டுரைகள் குறித்தும் நாங்கள் நடத்தும் ‘குறள்நெறி’ இதழில் வெளியாகும் கட்டுரைகள் குறித்தும் நண்பர்களிடம் கருத்துப் பகிர்வார் என அறிந்திருக்கிறேன்.

### அவ்வளவு தொகையா ?

கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது, இலங்கைத் தமிழர் நலனுக்காக நிதி திரட்டினார். ஈரோடு தமிழன்பன் தலைமையில், தமிழறிஞர்கள் சென்று நிதி அளித்தோம். அப்போதும், “இலக்குவனார் எங்க வாத்தியார்” எனச் சொல்லி என்னைப் பெருமையாக உணர வைத்தார். அப்போது நான் கொடுத்த காசோலையில் பின்புறம் எனது கைபேசி எண்ணை எழுதி இருந்தேன். அதைப் பார்த்தவர் நகைச்சுவையாக, “இவ்வளவு பெரிய தொகையா தர்றீங்க” எனக் கேட்டு கலகலப்பூட்டினார்.

2007-ஆம் ஆண்டு, அப்பாவின் நூல்களை நாட்டுடைமையாக்கினார். அதற்காக நன்றி தெரிவிக்கச் சென்றபோதும் அக்கறையாக நலம் விசாரித்து அனுப்பினார்.

### செம்மொழிச் செப்பேடுகள்

தமிழுக்குச் செம்மொழித் தகுதி பெறுவதற்காக கலைஞர் முயற்சித்தபோது, சில அதிகாரிகள் ‘வழக்கொழிந்த மொழிக்குத்தான் செம்மொழி மரியாதை வேண்டும். தமிழுக்கு எதற்கு’ எனக் கேள்வி எழுப்பி இருந்தனர். ‘இப்படி ஒரு கருத்து வருகிறதே?’ என தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநராக இருந்த பேராசிரியர் ம.ராசேந்திரன் அவர்களிடம் கலைஞர் கேட்டிருக்கிறார். இந்தச் செய்தியை ம.ரா. அவர்கள் என்னிடம் பகிர்ந்து கொண்டு, ‘இது தொடர்பாக, சர்வதேச மொழியியல் அறிஞர்கள் கருத்து, என்ன என்பதை தெரிவிக்க வேண்டும்’ என்றார்.

நான் அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் சிறப்பு வருகை தரும் பேராசிரியராகப் பணியாற்றியிருக்கிறேன். அங்கு ஜார்ஜ் எல்.ஹார்ட் என்கிற மொழியியல் அறிஞர் தமிழ் இருக்கையில் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். 18 வெளிநாட்டு மொழிகளில் புலமை பெற்றவர். 5 செம்மொழிகளில் சிறப்பான புலமை கொண்டவர். நான் அவரிடம் பேசி, ‘தமிழுக்குச் செம்மொழித் தகுதிநிலை குறித்து, நீங்கள் கடிதம் எழுத வேண்டும்’ எனக் கேட்டுக் கொண்டேன். அவரும் இசைந்து, ‘மறைமலை கேட்டுக் கொண்டதன் பேரில்’ என கடிதம் எழுதி அனுப்பி இருந்தார். அதை ஒன்றிய அரசுக்கு அனுப்பி, தமிழுக்குச் செம்மொழித் தகுதிக்கான பணிகளை வேகப்படுத்தினார் கலைஞர்.

அந்த முயற்சிகள் குறித்து, தான் எழுதிய **‘செம்மொழிச் செப்பேடுகள்’** நூலில் எழுதி இருக்கிறார் கலைஞர். அதில் என்னைப் பற்றியும் குறிப்பிட்டு எழுதி, எனக்கு சிறப்புச் செய்தார். அதேபோல, செம்மொழி மாநாட்டிலும் எனக்கு வாய்ப்பு அளித்து மகிழ்ந்தார். அதன் தொடர்ச்சியாக 2015-ஆம் ஆண்டுக்கான செம்மொழி விருதினை எனக்கு அறிவித்தார், இன்றைய முதலமைச்சர்.

கலைஞரின் நூற்றாண்டுத் தொடக்கத்தில் **‘குறள்நெறி’** மின்னிதழில் கலைஞர் சிறப்பு மலர் தயாரித்திருந்தோம். 2023-ஆம் ஆண்டு மே மாதம் ஜப்பான் சென்றிருந்த முதலமைச்சர் அவர்களிடம், அங்கு பணியாற்றி வரும் தம்பி மகன் முத்துவேலன் அவர்கள் மின்இதழை அச்சுப்படியாகக் கொடுத்து மகிழ்ந்தார். நூற்றாண்டுத் தொடக்கத்தில், கலைஞருக்கு வெளிநாட்டில் கிடைத்த அந்த அன்பினைப் பார்த்து, அகமகிழ்ந்துள்ளார் நமது முதலமைச்சர் அவர்கள்.

அப்பா எதையெல்லாம் முன்னெடுத்தாரோ, அதை உலகமே வியக்கும் வகையில், செய்து முடித்தவர் கலைஞர். அவருக்கு நாங்கள் காட்டும் அன்பு, அவர் புகழ் பேசுவதுதான். எப்போதும் கலைஞர் புகழ் பேசுவோம்!

**தொகுப்பு :**
**நீரை மகேந்திரன்**

....பகிர்வார்கள்

## வளர்ச்சி உண்மைதானா?

ஏழை, எளியோர் முதல், நடுத்தர வர்க்கத்தினர் வரை, எல்லோரையும் பாதிக்கக்கூடிய பெரும் பிரச்சினையாக ‘விலைவாசி உயர்வு’ உருவெடுத்திருக்கிறது. ஆனால், அதைக் கட்டுப்படுத்த வேண்டிய ஒன்றிய அரசோ நிர்வாகத் திறமையின்மையால் தடுமாறி வருவதைப் பொருளாதாரப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. ஒன்றிய நிதி நிலை அறிக்கைக்கு முன்பாக ‘சி-வோட்டர்’ என்கிற ஆய்வு நிறுவனம் நடத்திய கருத்துக் கணிப்பில் , ‘இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி விகிதம், கடந்த 4 ஆண்டுகளைவிட குறைந்து 6.4% என்ற அளவிலேயே இருக்கும்’ என்கிறது.

‘2017-18-ஆம் ஆண்டில் 6 சதவிகிதமாக இருந்த வேலையில்லாதோர் எண்ணிக்கை 2023-24-ஆம் ஆண்டில் 3.2 சதவிகிதமாகக் குறைந்துள்ளது’ என ஒன்றிய அரசின் பொருளாதார ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஆனால், உண்மையில் வேலையின்மை விகிதம் அதிகரித்து வருகிறது என்பதை, பல தகவல்கள் சொல்கின்றன.

2025-26 நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6.6 சதவிகிதமாக இருக்கும் என்றும் கூறியுள்ள சி-வோட்டர் ஆய்வு, இந்தியாவின் அனைத்து மக்களையும் பாதிக்கக்கூடிய பிரச்சினையாக ‘விலைவாசி உயர்வு’ உள்ளதாகக் கூறியுள்ளது. மேலும் விலைவாசி உயர்வு தங்கள் வாழ்வாதாரத்தைக் கடுமையாகப் பாதித்திருப்பதாக, 50 சதவிகிதத்துக்கும் அதிகமானோர் இந்த ஆய்வில் கூறியிருக்கின்றனர்.

2014-ஆம் ஆண்டில் பிரதமராக மோடி பொறுப்பேற்றதில் இருந்தே விலைவாசி கடுமையாக அதிகரித்து வருவதாக, ஆய்வில் பங்கெடுத்த மூன்றில் இரண்டு பேர் கருத்து தெரிவித்துள்ளனர். குறிப்பாக, கடந்த ஓராண்டில் ஊதியத்தில் மாறுபாடு இல்லை என்றும், ஆனால் செலவுகள் இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது என்றும் கூறி இருக்கின்றனர். அதனால், குடும்பச் சுமை அதிகரித்திருக்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளனர். இந்த ஆய்வின் முடிவில், பெரும்பாலான இளைஞர்களுக்குப் போதுமான வேலைவாய்ப்புகளும், முறையான ஊதியமும் கிடைக்கவில்லை என்றும் தெரிய வந்துள்ளது.

வேலைவாய்ப்பை உருவாக்கி, மந்தநிலையைப் போக்க வேண்டிய ஒன்றிய பா.ஜ.க. அரசோ, உத்தரபிரதேச ‘கும்பமேளா’ கற்காலத்துக்குள் மூழ்கிக் கிடக்கிறது.

## :ப்ளாஷ்பேக்



### தளபதி வெளியிட்ட எனது நூல்!



இறை.கார்குழலி

2010-ஆம் ஆண்டு தஞ்சையில் நடைபெற்ற விழாவில், அரண்மனை வளாகத்தில் புத்தகக் காட்சியை அன்றைய தமிழ்நாடு துணை முதலமைச்சர், இன்றைய முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். அப்போது, தளபதி அவர்கள் நான் ஆங்கிலத்தில் எழுதிய ‘Heritage Buildings of Thanjavur’ நூலை வெளியிட, அமைச்சர்கள் பொன்முடி, தங்கம் தென்னரசு மற்றும் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம், எஸ்.என்.எம்.உபயதுல்லா எனத் தலைவர்கள் பெற்றுக் கொண்டனர். உடன், எனது தந்தை தஞ்சை நகர மன்ற மேனாள் தலைவர் சி.இறைவன், குடந்தை துணை மேயர் தமிழழகன் ஆகியோர் இருந்தனர்.

**– முனைவர் இறை.கார்குழலி** பி.இ., பி.ஹெச்.டி,
**மேனாள் மாநில பொறியாளர் அணித் துணைச் செயலாளர்,**
**தஞ்சாவூர்,**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### என்.வி.என்.னின் கடைசி நாட்கள்!

1975-ஆம் ஆண்டு ஜூன் மாதம் எமர்ஜென்சி சமயத்தில் என்.வி.நடராசன் உடல்நலம் குன்றி சென்னை, பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். 2 மாதம் மரணப் படுக்கையில் இருந்த அவரை கலைஞரும், ஏனைய அமைச்சர்களும் காலை, மாலை என இருவேளையும் சென்று சந்தித்தனர். வாழ்நாளின் கடைசி நாட்களில் தன் மகன்கள் சோமு, செல்வத்தை அழைத்து, கட்சிக்கும், கலைஞருக்கும் என்றைக்கும் துரோகம் செய்யக்கூடாது என அறிவுறுத்தினார். ‘காலமெல்லாம் கழகமே’ என உழைத்த அவரது உயிர், ஆகஸ்ட் 3-ஆம் தேதி பிரிந்தது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

737

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.